

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 12 | காலாண்டிதழ் ஜனவரி - மார்ச் 2017 | கதிர் - 1


# நம்பிக்கை, தன்னம்பிக்கை, மூடநம்பிக்கை





ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்க்கையின் அடித்தளம் நம்பிக்கை. நம்பிக்கை என்பது வேறு நம்பக தன்மை என்பது வேறு. நம்பக தன்மை இருக்கிறதோ இல்லையோ என்ற சந்தேகம் இல்லாமல் இருப்பது தான் நம்பிக்கையின் அடிப்படை தத்துவம். கணவன் மனைவியை நம்ப வேண்டும். மனைவி கணவனை நம்ப வேண்டும். தொழிலாளிகள் முதலாளியை நம்ப வேண்டும். முதலாளிகள் தொழிலாளிகளை நம்ப வேண்டும். நோயாளி மருத்துவனை நம்ப வேண்டும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நாம் பயணம் மேற்கொள்கிறோம் என்றால் எதில் செல்கின்றோமோ அந்த வாகனத்தின் ஓட்டுநரை நாம் நம்ப வேண்டும். நம்பிக்கை இல்லையென்றால் திசை மாறிய பறவைகள் போன்று வாழ்க்கை மாறிவிடும். வாழ்வாதாரம் பாதிக்கப்படும். கனவுகளை நினைவாக நம்புவதை விட கண்ணால் காண்பதை நம்புவது தான் சால சிறந்தது. நம்ப வைப்பதற்காக சொல்லப்படும் வார்த்தைகள் நம்பிக்கைக்கு உரியதாக உள்ளதா என்று ஆராய வேண்டும். விலங்குகள் ஆனாலும் பறவைகள் ஆனாலும் எந்த ஜீவராசிகளானாலும் அதனதன் தாயை தான் அவைகள் நம்புகின்றன. தாய் கைவிடமாட்டாள். கைக்கொடுப்பாள். பாதுகாப்பாள், உணவளிப்பாள். ஏன் தன்னையே கூட கொடுப்பாள். அவள் தான் தாய். தாயை நம்பும் குழந்தைகள் நம்பிக்கை இழுந்து விடாமல் தாய் பாதுகாக்கிறாள். நம்பிக்கை இல்லாத வாழ்க்கை விழலுக்கு இறைத்த நீர் போன்றது. நீர் குமிழிபோல் உடைந்துவிடலாம். சிதைந்து விடலாம். ஆகையால் நம்பிக்கை மனித வாழ்க்கையின் முதுகு எலும்பு என்று கூட கூறலாம். மனிதனை நம்புவதா அல்லது கடவுளை நம்புவதா? கடவுள் என்று சொல்லி திரியும் மனிதனை நம்புவதா? என்பது தான் கேள்வி. ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள். ஆசை வார்த்தைகளை கூறி அன்பு மயக்கத்தை ஊட்டி அழிவு பாதையில் அழைத்து செல்பவர்களை நாம் நம்ப வேண்டுமா? மயக்கமும் மாயமும் தான் வாழ்க்கையா? சிந்தித்து பார்க்க வேண்டும். கண் தெரியவில்லை என்றால் கையில் இருக்கும் குச்சியை நம்புகிறோம்.காது கேட்கவில்லை என்றால் அதற்கு உரிய கருவியை நம்புகிறோம். கணவன் சரியில்லை என்றால் பெற்ற மைந்தனை நம்புகிறோம். எதுவும் சரியில்லை என்றால் யாரை நம்புவது. இந்த இடத்தில்தான் மகான்களுடைய அருமையும் குருமார்களின் அருள் ஆசியும் நமக்கு புரிகிறது. அப்பொழுதுதான் தன்னம்பிக்கை பிறக்கிறது.

தன்னம்பிக்கையை ஊட்டுவதற்கும், நமக்குள்ளே ஒரு தைரியத்தை உண்டு பண்ணுவதற்கும், ஊனமுற்ற மனதிற்கு ஊன்றுகோலாக விளங்குவதற்கும் ஒரு குரு தேவைப்படுகிறது. தன்னம்பிக்கை பிறந்த பிறகு நாம் இதை செய்கிறோம். நான்தான் இதை செய்தேன். என்னால் எதையும் சாதிக்க முடியும். முடியாதது ஒன்றும் இல்லை. இமயத்தை தொட்டு விடுவேன், நிலாவை பிடிப்பேன், வானத்தை வில்லாக வளைப்பேன். மணலை கயிறாக திரிப்பேன் என்ற அகங்கார எண்ணங்கள் உதிக்கின்றன. இது தன்னம்பிக்கையின் உச்ச கட்டத்தினால் ஏற்படும், செருக்கு எண்ணங்கள். இது தேவையில்லை. தன்னம்பிக்கையை ஊட்டிய ஒரு குரு நமக்கு இதை சொல்லி கொடுக்கவில்லை. அகங்காரத்தினால் நாம் அதை தண்ணீர் ஊற்றி வளர்கிறோம். அகங்காரம் இல்லாத ஆணவம் இல்லாத மமதை இல்லாத எண்ணங்கள் தான் தன்னம்பிக்கைக்கு வெற்றி பாதையை வகுக்கும்.

உடல்நிலை சரியில்லை என்றால் மருந்து எடுத்து கொள்கிறோம். இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறோம். ஜோதிட ஆலோசனை பெற்று பரிகாரம் செய்கிறோம். கோயில் கோயிலாக சென்று பரிகாரம் செய்கிறோம். வித விதமான பொருட்களை காணிக்கை ஆக்குகிறோம். இறைவா என்னை நோய்நொடிகளில் இருந்து காப்பாற்று. இதய, மூளை, மூட்டு, கருப்பை இந்த அறுவை சிகிச்சைகளில் இருந்து காப்பாற்றி எனக்கு உயிர் பிச்சை தா என்று மன்றாடி வேண்டுகிறோம். எங்கு சென்றும் எத்தனை பரிகாரங்கள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. நம்பிக்கையை இழக்கிறோம். தொடர்ந்து விமோசனம் கிடைக்கவில்லை என்றால் மூடநம்பிக்கை எனும் விதை விதைக்கப்படுகிறது. பகுத்தறிவாளர்களின் பங்கு அங்கு இருக்கிறது. அந்த சிந்தனையாளர்களின் மூளை சலவை நம்மை ஆட்கொள்கிறது. இறை நம்பிக்கையே மூடநம்பிக்கையாக தோன்றுகிறது. சகுனம் பார்ப்பது மூடநம்பிக்கை, விளக்கேற்றுவது மூடநம்பிக்கை, இறைவனின் படத்தை வைத்து பூஜிப்பது மூடநம்பிக்கை. இந்து கலாச்சாரங்களை பின்பற்றுவது மூடநம்பிக்கை. இப்படி எல்லாமே மூடநம்பிக்கையாக நமக்கு தோன்றுகிறது. இது நல்ல இரத்தத்தில் சாக்கடை நீர் கலப்பதற்கு சமம். ஆன்மீகவாதி நாத்திகவாதியாக மாறிவிடுகிறான். மூடநம்பிக்கை இருப்பதால் நாம் என்ன இழந்துவிடுகிறோம்? இல்லாதிருப்பதினால் நாம் என்ன உயர்ந்து விடுகிறோமோ? இரண்டுமே இல்லை.

இவையெல்லாம் கடந்த நிலையை, ஒருமித்த நிலையை அடைய வழியே கிடையாதா? நமது கண்கள் இயங்குகின்றன. இதயம் இயங்குகின்றது. கை கால்கள் இயங்குகின்றன. மூளை வேலை செய்கிறது. இந்த உறுப்புகள் அனைத்தையும் நாமே உருவாக்கி கொண்டு விட்டோமா? எங்கோ இருக்கும் செயற்கை கோளை இங்கு இருந்து நாம் இயக்குகின்றோம் அல்லவா? வெட்ட வெளியில் பொன்னம்பலத்தில் சித்தர் தத்துவ நெறிபடி ஈஸ்வரனும், ஈஸ்வரியும், காமேஸ்வரனும், காமேஸ்வரியும் இணைந்து ஆடிக்கொண்டு இருக்கும். ஆகச தத்துவ நாட்டியத்தால் (Cosmic dance) தான் நாம் இயங்குகிறோம், ஓடுகிறோம், பாடுகிறோம், விளையாடுகிறோம் என்பதை மறக்கலாகாது.

ஆகையால் நம்பிக்கைதான் அடிப்படை என்பதை மனதில் கொண்டு, குஞ்சுகள் தாயை நம்புவது போல் சித்தர்களோடு இணைந்து ஒரே சக்தியாய் பராசக்தியாய் மாடம்பாக்கம் சக்திபீடத்தில் உலக தாயாய் அருள்பாலித்து கொண்டு இருக்கும் லலிதா பரமேஸ்வரியை சரண் அடைவோம். எல்லையில்லா இன்பம் அடைவோம்.

வாழ்க வையகம்!

குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில்
சந்தாதாரராகி
ஸத்குருவின்
திருவருள் பெறுங்கள்

சந்தா
ரூ. 101/-

# பித்ரு தோஷமும் பரிகாரமும்

மனித வாழ்க்கையில் பிறப்பு இருந்தால் இறப்பும் உண்டு. மரணம் என்பது உடலுக்கா அல்லது உயிருக்கா என்பது கேள்வி. உயிர் பிரிந்த பிறகு உடல் அழிக்கப்படுகிறது. பிரிந்த உயிர் எங்கே செல்கிறது என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மரணம் அடைய போகிறோம் என்று தெரிந்து இறப்பது வேறு, எதிர்பாராமல் இறந்துவிடுவது வேறு. இதைதான் இயற்கை மரணம் என்றும் துர்மரணம் என்றும் பிரித்து இருக்கிறோம். துர்மரணம் என்பது விபத்துக்களில் இறப்பது, தற்கொலை செய்து கொள்வது, மிருகங்களால் தாக்கப்பட்டு இறப்பது போன்றவை. பூரணமாக வாழ்ந்து இயற்கையாக இறப்பது தீர்க்க ஆயுளை குறிக்கும். எப்படியோ! மீண்டு அந்த உயிரானது அந்த உடலுக்குள் புகுந்துகொள்ள முயற்சிக்கிறது. திக்கு திசை தெரியாமல் தவிக்கிறது. அந்த நேரத்தில் தான் புதல்வனோ, புதல்வியோ அல்லது உரியவர்களோ செய்யும் ஈம கிரியையில் உள்ள மந்திர சக்தியால் வழிகாட்டப்பட்டு முன்னோர்களின் உலகத்தில் கரை சேர்க்கப்படுகிறது. இதுபோன்ற சரியான முறையில் நாம் இறந்தவர்களுக்கு செய்யவேண்டிய சடங்குகளை, திதிகளை முறைப்படி செய்யவில்லை என்றால் அவர்களை ஆவியாக அலைய விடுகிறோம் என்று அர்த்தம். அப்படி ஆவியாக அசையும் போது உணவு கிடைக்காமல் தவிக்கும் போது அதன் பயனாக பித்ரு தோஷம் ஏற்படுகிறது. இதனால் ஜாதி விட்டு ஜாதி திருமணம், கள்ள தொடர்பு, பல மனைவிகள், பல புருஷன்கள், மாற்று திறனாளிகள், மூளை கோளாறு உள்ள குழந்தைகள், வீட்டில் திருமண தடைகள் இவையெல்லாம் ஏற்படுகின்றன. பித்ரு தோஷம் உள்ளவர்கள் அதற்குரிய பரிகாரத்தை தேடி கொண்டால் விமோசனம் அடையலாம்.

மரணம் என்பது வேறு. முக்தி என்பது வேறு. முக்தி நிலை அடைந்தவர்களுக்கு மரணம் என்பது கிடையாது. பிறப்பு இறப்பு அற்ற மரணம் இல்லா பெருவாழ்வு நிலைதான் முக்தி நிலை. இதை தான் மோட்சம் என்கிறோம். இப்பிறவிலேயே முக்தி நிலையை அடைய நாம் முயற்சிக்க வேண்டும். அதை அடைந்தவர்கள் தான் ஜீவன் முக்தர்கள் என்று சொல்லக்கூடிய சத்குரு சேஷாத்ரி ஸ்வாமிகள் போன்ற மகான்கள். அவர்கள் முக்தி அடைந்த திதியைதான் நாம் ஆராதனையாக கொண்டாடி கொண்டு இருக்கிறோம். பித்ரு தோஷம் உடையவர்கள் பிரச்சனையில் உச்சகட்டத்தில் திணறி கொண்டு இருப்பவர்கள், மோன தவத்தில் இருந்து முக்தி நிலையை அடைந்த இந்த மாபெரும் மகானின் ஆராதனை விழாவில் பங்கேற்று சரணடைந்து நம்மை நாமே ஒப்படைத்துவிட்டால் எல்லையில்லா மகிழ்ச்சி பெருகும். நினைத்தது நிறைவேறும். தேடியது கிடைக்கும். வளமான வாழ்க்கை அமையும். வாருங்கள் பங்கேற்போம். பயன் அடைவோம். - குருஜி

# உலக மகா ஸத்குரு

*கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*

*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்*

பெருமதிப்பிற்குரிய சேஷபக்தர்களே! வணக்கம். உலக மகா ஸத்குரு என ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை நமது குருஜி கே.வி.எல்.என். சர்மா அவர்கள் பெருமை பொங்க உள்ளம் உவகையுற எப்போதும் கூறுவார்கள். அவரின் கூற்றில் எவ்வளவு பெரிய உண்மை புதைந்துள்ளது. உலக மகா ஸத்குரு என்றால் அது நம் பதினெண் சித்தர் சக்திபீடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்தான்.

அவர் வாரி வழங்கும் பேரருள் பெட்டகம்!

அவர் படிக்க படிக்க புத்துயிர் தரும் புத்தகம்!

அவரிடம் நாம் மனமுருகி பிரார்த்தனை செய்தால் எவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தாலும் மிக சுலபமாக தீர்த்து வைப்பார். நான் குருஜி அவர்களிடம் சில நேரங்களில் சில சந்தேகங்களை கேட்டிருக்கிறேன். அப்படி ஒருமுறை நான் குருஜி அவர்களிடம் ஜாதகப்படியும், விதிப்படியும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை மாற்றவே முடியாதா? என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்தபடி "அதற்குத் தான் நம் உலகமகா ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் இருக்கிறாரே! அவர் பாத கமலங்களை இறுகப்பிடித்து பிரார்த்தனை செய்யுங்கள். எவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தாலும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஓடிவிடும் என்று கூறினார். அது எவ்வளவு பெரிய உண்மை என்பது நான் என் வாழ்வில் பல பிரச்சினைகள் சந்தித்து, ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் பாதகமலங்களை பற்றி பிரார்த்தனை செய்து அவரருளால் மீண்டு வந்தபோதுதான் புரிந்துகொள்ள முடிந்தது. அப்பேற்பட்ட உலக மகா ஸத்குரு நமது பதினெண் சித்தர் சக்தி பீடத்தில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். அவரை அடிபணிந்து நாம் நம் துயரங்களிலிருந்து அணுஅணுவாக இலகுவாக விடுதலை பெறலாம்.

ஒரு பெரும் விபத்தில் சிக்கியும் நான் இன்று உங்களுடன் தொடர்பு கொள்ள இந்த மடல் எழுதிக் கொண்டிருப்பதற்கு அவரது பேரருளே காரணம். சிறந்த மருத்துவர்கள் குழந்தைகளுக்கு ஊசி போடும்போது வலி தெரியாமல் இருக்க அழகாகப் பேசியே அல்லது விளையாட்டு காட்டியே ஊசிபோட்டு விடுவார்கள்.

அதுபோல நமக்கு எவ்வளவு பெரிய இன்னல்கள் வந்தாலும், அதன் வலியோ, சுவடோ தெரியாமல் ஸத்குருவின் பேரருள் நம்மை காப்பாற்றி கரை சேர்க்கும். இந்த உலகின் வழக்கம் என்னவென்றால் அருகில் இருக்கும் பொற்பாதம் நம் கண்களுக்கு எப்போதும் தெரிவதில்லை. எங்கோ இருக்கும் ஒரு அற்புதத்தைத் தேடி ஓடுகிறோம். இனி அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். ஓடி வாருங்கள். மாடம்பாக்கம் ஸ்ரீ பதினெண் சித்தர் சக்திபீடத்திற்கு மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் பேரருளைப் பெறுங்கள். இச்சைகளிலிருந்தும் இன்னல்களிலிருந்தும் விடுதலை பெறுங்கள்.

வரும் 9,10ம் தேதி ஜனவரி 2018ல் அவரது ஆராதனை விழா மாடம்பாக்கம் பதினெண் சித்தர் சக்திபீடத்தில் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்துகொண்டு பொற்பாதத்தின் அற்புத பலனைப் பெறுங்கள். அங்கு நடைபெறும் இறைத் திருப்பணிகளுக்கு இயன்ற அளவு நிதி உதவி தாருங்கள்.

வாருங்கள் நலமோடு செல்லுங்கள் வளமோடு

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்

பணிவுடன்
திரு. மருதபரணி

## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**ஜனவரி 2018**

1 பௌர்ணமி
8 ஹஸ்தம்
9-10 மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் மகா ஆராதனை விழா
14 பொங்கல் பண்டிகை
15 மாட்டுப் பொங்கல்
16 தை அமாவாசை
24 ரத சப்தமி
26. தைக் கிருத்திகை
31 தைப்பூசம் / சந்திர கிரகணம் பௌர்ணமி

**பிப்ரவரி**

5 ஹஸ்தம்
மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஜெயந்தி விழா
13 மகா சிவராத்ரி
15 அமாவாசை

**மார்ச்**

1 பௌர்ணமி
17 அமாவாசை
25 ஸ்ரீ ராமநவமி
31 பௌர்ணமி

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.
முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
29710972, 8754486723
பாலாலயம் : 2228 1337
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.




அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# ராசி பலன்கள் ஜனவரி - மார்ச் 2018

**அன்பர்கள் அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள். தித்திக்கும் இனிப்பு செய்திகள் வரட்டும். சிந்தையில் தெளிவு வளரட்டும்.**

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை (முதல் பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவானின் அருள் கூடியிருக்கிறது. அஷ்டம சனி விலகியிருக்கிறது. திருமண தடை அகலும். காதல் கைக்கூடும். குடும்பத்தில் குதூகலம் பிறக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். நீண்ட நாள் தடைப்பட்ட வழக்கு வியாஞ்சியங்கள் வெற்றி பெறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு வருமானம் பெருகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் உடனடியாக கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு குழப்பம் தீர்ந்து தெளிவு அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் மிக நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் தேதி 14வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். எங்கும் எதிலும் வெற்றி கிடைக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். காதல் திருமணம் தடை அகலும். கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்கள் இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு, ராகுக்காலம். சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். குருபலம் கூடியுள்ளது. அஷ்டம சனி விலகிவிட்டது. காதல் திருமணம் கைக்கூடும். வீண் கவலைகள் வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு நிலம் பாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு நினைத்தது நிறைவேறும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கயிலாய கம்பளி சட்டை முனி சித்தர், கிழமை : திங்கள்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். 6ம் இடத்தில் குருபகவானும் அஷ்டம சனியும் தொடங்கிவிட்டது. எதிலும் எங்கும் எச்சரிக்கை தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடித்தல் நல்லது. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். காதலில் அவசரம் கூடாது. வியாபாரிகள் தொழிலதிபர்கள் எச்சரிக்கையுடன் தொழில் செய்ய வேண்டும். கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்கள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நடுஇரவு பிரயாணத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கடினமாக உழைக்கவேண்டும். விவசாயிகளுக்கு மாத இறுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும். அரசியல்வாதிகள் எதிரிகளை நண்பர்களாக ஆக்கி கொள்வது நல்லது. பொதுவாக இந்த மாதம் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் தேதி 16 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமசனியின் ஆதிக்கம் தெரிகிறது. குருவும் மறைவிடத்தில் இருக்கிறார். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டாம். கலைஞர்கள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் கெட்ட பழக்கவழக்கங்களை தவிர்ப்பது நல்லது. விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகக்கு மனைவி மூலம் சொத்துக்கள் கிடைக்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் தேதி 12 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் குறைந்துள்ளது. அஷ்டமசனியின் ஆதிக்கம் தெரிகிறது. உடல் நலத்தில் கவனம் தேவை. ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கடல் வாணிபம் செய்பவர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். மாணவர்கள் வீண் வம்புகளுக்கு போக கூடாது. விவசாயிகளுக்கு புதிய நட்பு உருவாகும். அரசியல்வாதிகளுக்கு சாலை விபத்து உண்டு. எச்சரிக்கை. பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிக்கவேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீகபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஜனவரி**

ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கண்டகசனி ஆரம்பித்துள்ளது. இருப்பினும் குருபலம் கூடியுள்ளது. திருமணதடை அகலும். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நல்லது. கடினமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். காதல் கைக்கூடும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கலைஞர்கள் நல்ல ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் அலட்சியமின்றி படித்தால் முன்னேற்றம் அடையலாம். விவசாயிகளுக்கு வருமானம் பெருகும். பணியாளர்களுக்கு கௌரவ பதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீகருவூரார் சித்தர், ஸ்ரீகபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் ராகு பகவான் சஞ்சரிப்பதால் பேச்சில் கவனம், நிதானம் தேவை. கண்டக சனி இருப்பதால் கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். காதல் விஷயத்தில் அவசர படவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். சிறு சிறு தடங்கல்கள் வந்தாலும், மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீகருவூரார் சித்தர், ஸ்ரீகபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. நீண்ட நாள் தடைப்பட்ட விஷயம் முடியும். காதலில் அபிவிருத்தி ஏற்படும். திருமணம் கைக்கூடும். உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். கலைஞர்கள் ஆத்திரமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் சூழ்ச்சியால் பாதிப்பு உண்டு. பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். சனியுடன் குருவும் நல்ல இடத்தில் சஞ்சரிக்கிறார். வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படும் நேரமிது. காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். பணியாளர்களுக்கு நினைத்த காரியம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்கள் புதிய யுக்தியை கையாண்டு ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு கௌரவ பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கிரகங்கள் அனுகூலமாக இல்லாததால் கணவன் மனைவி இடையே புரிதலை அதிகரித்து கொள்ளவேண்டும். காதல் விஷயத்தில் அவசரம் காட்டினால் முறிவு ஏற்படலாம். சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்ப்பார்த்ததை விட அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பு ஆதாயம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு நிவாரண தொகை கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் ஆதாரயம் அடைவார்கள். பணியாளர்களுக்கு சிறு தொகை பதவி உயர்வாக கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீகஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னி சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். இருப்பினும் ராகுவோடு இருக்கிறார். அதனால் மனதில் வீண்குழப்பங்கள் ஏற்படும். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. காதல் திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு நண்பர்களால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு ஆன்மீக பயணம் ஏற்படும். பணியாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டை முனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

# சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



### ஜனவரி

ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அர்த்தாஷ்டம அஷ்டமசனி விலகிவிட்டது. இருப்பினும் குருபகவான் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதார விஷயத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் திருமண தடை அகலும். சொத்துக்களை திருத்தி கட்டும் யோகம் உண்டு. வியாபாரிகள் தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் வீண் வம்புகளில் ஈடுபட வேண்டாம். பணியாளர்கள் பணவிஷயத்தில் கவனமாகஇருக்க வேண்டும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எங்கும் எதிலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். குடும்பத்தில் மருத்துவ செலவு ஏற்படலாம். பொருளாதார நெருக்கடி ஏற்படும். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் வழக்கம் போல் வியாபராத்தை கவனித்தால் போதுமானது. புதிய வீடுகட்டும் முயற்சி வெற்றி பெறும். கலைஞர்கள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எதிரிகளின் சூழ்ச்சியால் அரசியல்வாதிகள் பாதிக்கப்படுவார்கள் எச்சரிக்கை. பணியாளர்கள் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்து பழகுவது நலம். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீடகணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் தேதி 20 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அர்த்த அஷ்டம சனி விலகிவிட்டது. இருப்பினும் குரு 3ம் இடத்தில் இருப்பதால் பொருளாதார விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமண தடை அகலும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். சகோதர சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் தேதி 19 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# கன்னி

(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. இருப்பினும் அர்த்தாஷ்டமசனி ஆரம்பித்துள்ளது. குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்படும். இருப்பினும் சுபகாரியங்கள் நடக்கும். திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மனதிற்கினிய சம்பவங்கள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்கவேண்டும். அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. பணியாளர்கள் பிரயாணத்தின்பேது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. இருப்பினும் அர்த்தாஷ்டம சனியால் பாதிப்பு உண்டு. மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். காதல் கைக்கூடும். திருமண தடை அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு பால்வினை நோய்கள் வருவதற்கு வாய்ப்பு உண்டு. எச்சரிக்கை. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு பெற்றோர்களால் ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு கௌரவ பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. இருப்பினும் சனிபகவான் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைக்கூடும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். மருத்துவ செலவு உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும், விவசாயிகளுக்கு பணபுழக்கம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் நோய்கள் வர வாய்ப்பு உண்டு. பணியாளர்களுக்கு மனதிற்கினிய பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# துலாம்

(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)



### ஜனவரி

ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். விபரீத ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. யாரையும் நம்பி ஏமாற வேண்டாம். பணவிஷயத்தில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். திருமணத்தில் அவசரம் காட்ட வேண்டாம். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படித்தால் முன்னேறலாம். விவசாயிகள், புதிய கடன்கள் வாங்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் ஆபத்து உண்டு. பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் தேதி 28 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேதுவுடன் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பம் ஏற்படும். கயிறு பாம்பாகவும், பாம்பு கயிறாகவும் தெரியும். மாய தோற்றத்தில் மயங்க வேண்டாம். ஜென்ம ராசியில் குரு சஞ்சரிப்பதால் மனபுழுக்கம் ஏற்படும். காதல் விஷயத்தில் அவசரம் வேண்டாம். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு அகலும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். கவனம் தேவை. கலைஞர்களுக்கு கற்பனை திறன் அதிகரிக்கும். மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பண இழப்பு ஏற்படும். பணியாளர்களுக்கு கடன் தொல்லை ஏற்படும். நிதானத்தை கடைப்பிடித்தால் இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் தேதி 24 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி விலகிவிட்டது. இருப்பினும் ராசியில் குருபகவான் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் பொருளாதார முடக்கமும், விரையமும் ஏற்படும். சில அன்பர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் முன்னேற்றம் காண்பார்கள். கடல் வாணிபம் அதிக லாபம் தரும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். மாணவர்களுக்கு வெளிநாட்டுக்கு சென்று படிக்கும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு திடீர் பிரயாணம் ஏற்படும். அரசியல்வாதிகள் கௌரவிக்கபடுவார்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழகிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# விருச்சிகம்

(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி நடந்துகொண்டு இருக்கிறது. குருபகவானும் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். ஆயைால் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் உதவி கிடைக்கும். சகோதர சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்கு பிரச்சனை ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 28 முதல் தேதி 30 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு இருக்கிறது. சுபவிரைய ஸ்தானத்தில் குரு இருக்கிறார். குடும்பத்தில் வீண் செலவுகள் ஏற்படலாம். கவனம் தேவை. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். திருமண தடை நீங்கும். காதலில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நகை வாங்கும் யோகம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். விவசாயிகள் இயந்திரங்களை கையாளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவங்கள் நடக்கும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் தேதி 26 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. சுயவிரைய ஸ்தானத்தில் குரு இருப்பதால் காதல் - திருமணம் கைக்கூடும். சுபசெலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய தொழிலில் முதலீடு செய்வார்கள். கலைஞர்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். படிக்க வேண்டும். அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு ஆதாயம் உண்டு. சாலை விபத்தால் அரசியல்வாதிகள் பாதிக்கப்படுவார்கள். எச்சரிக்கை. பணியாளர்களுக்கு தங்கம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் தேதி 25 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

**ஜனவரி**

ராசிநாதன் 11ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. இருப்பினும் ஜென்ம ராசியில் சனி சஞ்சரிக்கிறார். காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பு உருவாகும். மாணவர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 11ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடி இருந்தாலும் சனியின் பாதிப்பு தெரிகிறது. காதல்-திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணவரத்து அதிகரிக்கும். அயல் தேசத்தில் இருந்து கலைஞர்களுக்கு நல்ல தகவல்கள் கிடைக்கும். மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் வாங்குவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பணவரவு ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பிரயாணத்தின்போது கவனமாக இருந்தால் இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் ஜென்மத்தில் சனி இருப்பதால் உடல் நலத்தில் கவனம் தேவை. காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய தொடர்பு கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் கருவிகளை கையாளும்போது கவனம் தேவை. சிறு சிறு விபத்துகள் ஏற்படலாம். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத தகவல் வரும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு, ராகு காலம். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**ஜனவரி**

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 10ம் இடத்தில் குருவும் ஏழரை சனியும் ஆரம்பித்துள்ளது. எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். கலைஞர்களுக்கு அயல்நாட்டு செய்தி மகிழ்ச்சி தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் நிதி உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி பறிபோகும் எச்சரிக்கை. பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சேஷாத்ரி ஸ்வாமிகள், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவான் 10ம் இடத்தில் இருக்கிறார். கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். அடுத்தவர்கள் சொல்லுவதை கேட்கும் திறனை அதிகப்படுத்தி கொள்ள வேண்டும். காதலை தள்ளி போடுவது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். கலைஞர்கள் காதல் லீலைகளில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு வங்கிகளால் தொல்லை உண்டு. அரசியல்வாதிகளுக்கு கட்சியில் பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் கசப்பும் இனிப்பும் கலந்த மாதமாக இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி, 28 முதல் மார்ச் 2 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு தெரிகிறது. 10ம் இடத்தில் குரு இருப்பினும் அவரது பார்வை கைக் கொடுக்கும். சில அன்பர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். வீண் கற்பனைகள் வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு கற்பனை வலம் பெருகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பூமி வாங்கும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**ஜனவரி**

ராசிநாதன் லாபம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலமும், சனிபலமும் கூடியுள்ளது. நினைத்த காரியம் நிறைவேறும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு உறவினர்களால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு ஆன்மீக வாதிகளால் அருள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு தந்தை வழி சொத்து கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபார்வை ராசிக்கு விழுகிறது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் போட்டியாளர்களால் பாதிக்கப்படுவார்கள். கவனம் தேவை, கலைஞர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு திடீர் வெளியூர் பிரயாணம் ஏற்படும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. நினைத்தது நிறைவேறும். எங்கும் எதிலும் மகிழ்ச்சி நிலவும். காதல் - திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பு ஆதாயம தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு நிர்வாக திறமை பளிச்சிடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கயிலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கள்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 5 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10ல் சனீஸ்வர பகவானும் சஞ்சரிக்கிறார். பொருளாதர விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். வீண்செலவுகளை குறைப்பது நல்லது. வியாபாரிகள், தெழிலதிபர்கள் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். அகல கால் வைக்க வேண்டாம். கலைஞர்களுக்கு குழந்தைகளை உத்தேசித்து கவலை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். அரசியல்வாதிகள் உழலில் மாட்டி கொள்வார்கள். பணியாளர்களுக்கு இடமாற்றம் உண்டு. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சேஷாத்ரி ஸ்வாமிகள், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் தேதி 11 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். பணமுடக்கம் ஏற்படும். குழந்தைகளால் மனகவலை ஏற்படும். வெட்டிய உறவினர்கள் ஒட்டி கொள்ள வருவார்கள். காதல் விஷயத்தில் அவசரம் வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு பண நெருக்கடி ஏற்பட்டு அகலும். மாணவர்கள் பிடிவாத குணத்தை விடுவது நல்லது. விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு தந்தைவழி சொத்து சேரும். வங்கி பணியாளர்களும், அரசாங்க பணியாளர்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சேஷாத்ரி ஸ்வாமிகள், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10ல் சனீஸ்வர பகவான் இருக்கிறார். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு கவலை ஏற்படும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அனுசரிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கலைஞர்களுக்கு கடன் தொல்லை ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு தந்தை வழி சொத்து கிடைக்கும். பணியாளர்களுக்கு பணி சுமை அதிகரிக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கயிலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கள்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.*

# கனவிலும் காக்கும் மஹான்கள்

மஹான்கள் சூஷ்மமாக எங்கு? எப்பொழுது? வேண்டுமானாலும் இருப்பவர்கள். ஆபத்திலிருந்து நம்மை உடனுக்குடன் காப்பவர்கள். அதுமட்டுமல்ல, கனவில் வந்து, வரவிருக்கும் ஆபத்தை முன்கூட்டியே உணர்த்தி, காத்தருளி வழிகாட்டும் இரட்சகர்கள் அன்றோ! சேஷாத்ரி மஹானும், மஹா பெரியவாளும், பக்தர்களின் கனவில் உதித்து இன்னல் நீக்கி, காப்பாற்றியதை இனிக் காண்போம்!

சுந்தரேச செட்டியாரின் மகள்களான ஜானகிபாய், பார்வதி பாய் என்ற இரு குழந்தைகளும், சேஷாத்ரி சுவாமிகளின் மீது மிகுந்த பக்தியுடையவர்கள். ஒருமுறை ஜானகிபாய் இரவு உறங்கிக் கொண்டிருக்கும் போது கனவு கண்டாள். அக்கனவில் திருவண்ணாமலை சிவகங்கை குளத்தில் தானும் தன் தங்கை பார்வதியும் நீராடிக் கொண்டிருக்கும் சமயத்தில், பார்வதி நீரில் மூழ்கி நீரைக் குடித்து தத்தளிப்பதைக் கண்டு என்ன? செய்வதென்று அறியாது 'அம்மா' 'ஐய்யோ' நான் என்ன செய்வேன்? என்று கதறி அழுகிறாள்.

எங்கிருந்து வந்தாரோ தெரியவில்லை! அப்போது ஆபத்பாந்தவனாய் சேஷாத்ரி மஹான் குளத்தில் குதித்து, அக்குழந்தையை தூக்கி கரையேற்றிக் காப்பாற்றுகிறார். பிறகு இருவரும் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது ஜானகிபாயை கொடிய விடம் உடைய 'பெரிய ஓணான்' ஒன்று துரத்தி, விரட்டிக் கொண்டு அருகில் வந்தது மஹான் அனாத இரட்சகனாய் அந்த நிமிடத்தில் தோன்றி அக்கொடிய ஓணானை விரட்டி மரணத்தின் சமீபத்திலிருந்த அக்குழந்தையை காத்து ஆசீர்வதிக்கின்றார்.

ஜானகி துயில் விழித்து, சொப்பனத்தில் கண்டதை பெற்றோரிடம் கூற, அவர்கள் சேஷாத்ரி சுவாமிகளிடம் சென்று முறையிட்டு, இக்கனவினால் வந்த இன்னலை நீக்கவேண்டும் என எண்ணி அவரைக் கண்டு வணங்கி நின்றபோதே!

''என்ன? குட்டிக் குழந்தைகளே! வாருங்கள்! வாருங்கள்! குளத்தில் அவளைத் துரத்திய யமன் பின் உன்னையும் ஓணானாகத் துரத்தி வந்தாள் பார்த்தாயா? இனி ஒன்றும் பயமில்லை என இருகுழந் தைகளின் தலையையும் தடவிக் கொடுத்து பெற்றோரையும் குழந்தைகளையும் ஆசீர்வதித்தனுப்பினார். குழந்தைகளின் பெற்றோருக்கு தாங்கள் ஒன்றும் சொல்லாமலேயே மகான் அனைத்தையும் கூறியதும் வாயடைத்துப் போனார்கள் ஆச்சர்யத்தால்...

ஆம்! கனவில் வந்தருளியவனுக்கு அக்கனவு தெரியாதா!

வனஜாவிற்கு பிள்ளைக் குழந்தை பிறந்து பத்து நாட்களில் ஒரு சொப்பனம்!

குழந்தை எடுத்துக் கொண்டு 'ஸ்ரீமடம்' சென்று மகாபெரியவாளின் முன் குழந்தையை படுக்க வைத்துவிட்டு நமஸ்கரித்து அழுதபோது பெரியவா குழந்தையை தன்னுடைய கையில்.. வைத்திருப்பது மிகப் பெரிய ஆச்சரியமாய்! அதிசயமாய்! அவளுக்கு இருந்தது. சிறு குழந்தையானாலும் தன் கரம் கொண்டு தொடமாட்டாரே! என்னே நான் செய்த புண்ணியம்! 'இந்தா! என குழந்தையை பெரியவா கொடுக்க சிரித்த அவர் வதனத்தைக் கண்டு கொண்டே...அவள் கனவு கலைய விழித்துக் கொண்டாள். சந்தோஷத்தில் மிதந்தாள்!

குழந்தை இருபது நாள் ஆன பொழுது அழுதால் வெடித்து விடுமோ? என்று அஞ்சும் அளவிற்கு தொப்புள் பெரியதாக, ''கல் போல்'' இறுகியிருந்தது. ''வீல் வீல்'' என்று விடாமல் குழந்தை அழுது அலறுவது...கண்ணால் பார்க்க மிகவும் வருத்தமாக இருந்தது. நாட்களோ ஓடிக் கொண்டிருந்தன. ஒருநாள் குழந்தை வாந்தியெடுத்து வீறிட்டு அழுததில் உடல் முழுதும் நீலம் பாய்ந்து, கண்கள் சொருகி, மரணத்தின் விளிம்பில் குழந்தை. டாக்டரின் ஐம்பதே நாட்களான குழந்தையை எடுத்துச் செல்ல, அவர் பரிசோதித்துவிட்டு உடன் ஒரு ஆப்பரேஷன் தொப்புளில் செய்ய வேண்டும் எனக் கூறிவிட்டார். பெரியவாளே இதென்ன சோதனை...!

ஆப்பரேஷன் நல்ல படியாக முடிந்தது. குழந்தையின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. மூன்று மாதத்தில் குழந்தை பரிபூரணமாய் குணமாகியது.


நலம் பெற்ற குழந்தையை எடுத்துச் சென்று அவனருளால் நலம் பெற்றக் குழந்தையை அவர் தோளில் கிடத்தி, எல்லாமறிந்த மஹானே உங்களை நான் வலம் வரவேண்டும் என்று அக்குழந்தையின் தாயாகிய வனஜா பெரியவாளிடம் கூறினாள்...

பெரியவா அச்சிறிய இடத்தில் குறுக்கி அமர்ந்து தன் பக்கத்தில் அக்குழந்தையை நெருக்கிக் கொண்டு, ''என் மேலும் என்னருகில் உள்ள சந்தனக்கல் மேலும் படமால் வலம் வா!'' என்று கூற, மூன்று முறை வலம் வந்தவளை 'போதும்' என்று சொன்னவுடன் அவளும் நமஸ்கரித்து எழுந்தவுடன் புன்னகை தவழும் முகத்துடன் ''குழந்தையை எடுத்துக்கோ'' என்று ஆசீர்வதித்தார். அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவுண்டோ!

'வரவிருக்கும் ஆபத்தை, முன்கூட்டியே கனவில் காட்டி எச்சரித்து, ஆபத்திலிருந்து காக்கும் இம்மகான்கள்...! மக்களை தேடிச் சென்று காக்கும் தீர்க்கதரிசிகள்...அன்றோ...! என்றும் அவர்களின் ஆசிகள் நமக்கு வேண்டும், வணங்குவோம்! ஆசிகள் பெறுவோம்!

- ஜெயந்தி முரளி

## சொற்புதிர் குறுக்கெழுத்துப் போட்டி



**கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை கட்டங்களில் நிரப்புக:**

1. ஸ்ரீ சட்டைமுனி சித்தரை ஜாதிப்...அல்லது வில்வம் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.
2. ....சிவ என்று ஜபித்தபடியே அவதரித்தார் ஸ்ரீ சிவவாக்கிய சித்தர்
3. .....மலையில் சித்தியடைந்தார் ஸ்ரீ மகாபோகர் சித்தர்
4. கருவூரார் சித்தியடைந்த தலம்.....
5. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் சித்தியடைந்த தலம்...
6. ஸ்ரீ கடுவெளி சித்தர் சித்தி அடைந்த தலம்....
7. ஸ்ரீ இடைக்காடர் சித்தியடைந்த தலம்....
8. ஸ்ரீ அழுகணி சித்தர் சித்தியடைந்த தலம்...

**விடைகள் :**

**1. பூ, 2. சிவ, 3. பழனி, 4. கருவூர்,**
**5. மருதமலை, 6. காஞ்சிபுரம்,**
**7. திருவண்ணாமலை, 8. நாகப்பட்டினம்**

திருமதி ஜெயந்தி முரளி



19-12-17 சனிபெயர்ச்சி அன்று சனீஸ்வர சாந்தி ஹோமம் சக்திபீடத்தில் விமரிசையாக நடைபெற்றது.

# ஸ்ரீ ராஜகாளியம்மனின் மகிமை

ஸ்ரீ ராஜகாளியம்மன் என்பவள் யார்? இந்த கேள்விக்கு விடையை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சோழ நாட்டை சேர்ந்த, கண்ணகி கோவலன் கதையை தமிழ்நாட்டில் அறியாதவர்கள் யாரும் இல்லை என்று கூறலாம். மதுரையில் தன் கணவருக்கு சரியான நீதி கிடைக்காமல், கொலையுண்டதை எண்ணி மதுரையை அழித்த கற்புக்கரசி கண்ணகியை யாராலும் மறக்க முடியாது. பாண்டிய நாட்டின் காவல் தெய்வமாக இருந்தவள் தாம், அருளாட்சி, அரசாட்சி நாயகியாக இன்று நாம் அழைக்கும் ஸ்ரீ ராஜகாளியம்மன் தான் காவல் தெய்வமாக இருந்தும் கண்ணகி மதுரையை அழித்ததை தடுத்து நிறுத்த முடியவில்லையே என்று மனம் வருந்தி தானே மண்ணில் மறைந்து கொண்டாள். பல வருடங்களுக்குப் பிறகு அருளாட்சி நாயகியாகி மக்கள் துயர் தீர்க்க வெளி வந்திருக்கிறாள்.

1977 – ம் ஆண்டு மார்ச் மாதம் 31 – ம் தேதி அன்னை பராசக்திக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறு குருஜி சர்மாவிற்கு ஸத்குருவிடமிருந்து ஆணை பிறந்தது. மகானின் வழிகாட்டுதலின்படி அன்னை பராசக்தியின் சிலை ஒன்று கிடைத்தது. திண்டுக்கல்லுக்கு அருகில் தெத்துப்பட்டி என்ற கிராமத்தில் தான் ஆலயம் அமைக்க வேண்டும் என்று அன்னையிடமிருந்து ஆணை பிறந்தது. அம்பிகைக்கு ஸ்ரீ இராஜகாளியம்மன் என்று திருநாமம் சூட்ட வேண்டும் என்று உத்தரவும் கிடைத்தது. குருஜி சர்மா அவர்கள் தீட்க்ஷை வைத்து கொண்டார். பல முக்கியஸ்தர்களின் துணையோடு ஒரு அன்பரின் வீட்டில் அன்னையின் உத்தரவுப்படி அத்திக்கட்டையில் ஸ்ரீ இராஜ காளியம்மனின் சிலை ஒன்று வடிவமைக்கப்பட்டது. தினமும் பூஜைகள் நடந்து கொண்டிருந்தன. பிறகு அம்பிகையை முறைப்படி தெத்துபட்டி கிராமத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக குருஜி சர்மா அவர்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்றார். அம்பிகையை கீழே இறக்கி வைக்கும் தருணத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. மூன்று வருடகாலம் மழையே இல்லாமல் வாடி தவித்து கொண்டிருந்த தெத்துபட்டி கிராமத்தில் அடைமழை பெய்தது. அம்பிகை வற்றாத கருணை உள்ளம் கொண்டவள் அல்லவா? அந்த கருணையே மழையாக பெய்தது. அம்பிகை அருளாட்சி நடந்த வந்துவிட்டாள் என்ற உண்மையை கிராம மக்கள் உணர்ந்து கொண்டனர். 1980-ம் ஆண்டு ஜூலை மாதம் 8 – ம் தேதி பாலாலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. பல அன்பர்கள் உதவியோடு மூலாலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. முதல் கும்பாபிஷேகம் நடக்கும் பொழுது குருஜி .சர்மா அவர்களின் தலைமையில் நடந்தது. அம்பிகையை பிரதிஷ்டை செய்து பாலாலயம் கும்பாபிஷேகம், (பெரும் சாந்தி பெருவிழா) காணும் பாக்கியம் எத்தனை பேருக்கு கிடைக்கும்? பிறகு இரண்டாவது கும்பாபிஷேகம் 29-05-2005 ஆம் தேதி குருஜி அவர்களின் தலைமையில் நடந்தேறியது.

தெத்துப்பட்டி ஸ்ரீ ராஜகாளியம்மனிற்கு மாடம்பாக்த்தில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீ ராஜகாளியம்மனுக்கும் என்ன ஒற்றுமை? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழலாம். குருஜி .சர்மா அவர்களிடம் அம்பிகை அருள்வாக்கில் 'பதினெட்டு சித்தர்களுக்கு பீடம் அமைக்கப் போகும் சமயம் நானும் கண்டிப்பாக வருவேன். எனக்கும் ஒரு சன்னதி வேண்டும்' என்று கூறினாள். குருஜி .சர்மா அவர்களிடம் சூட்சமத்தில் கூறியதை நியாயப்படுத்தும் வகையில், ஊர்ஜிதப்படுத்தும் வகையில், பறைசாற்றும் வகையில், மீனாட்சி அம்சமாக சாந்த ஸ்வரூபமாக, ராஜமாதாங்கியாக, ஸ்ரீ லலிதாமகா திரிபுர சுந்தரியின் மந்திரினியாக மாடம்பாக்கம் பதினெண் சித்தர் சக்திபீடபிருந்தாவனத்தில் அருள்பாலித்து வேண்டிய வரங்களை வாரி வாரி வழங்கி கொண்டிருக்கிறாள்.

ஸ்ரீராஜகாளியம்மனுக்கு ஆடிப்பூரம், நவராத்திரி, விசேஷ நாட்களில் சந்தன காப்பு சாற்றி அழகுப்படுத்துகிறார்கள். பார்ப்பதற்குமே கண்கொள்ளா காட்சியாகும். பிரதி, செவ்வாய், வெள்ளி, ஞாயிற்று கிழமைகளில் ராகு காலத்தில் சிறப்பு பூஜை செய்கிறார்கள்.

எலுமிச்சம் பழம், நெய் விளக்குகளை ஏற்றி அம்பிகையிடம் முறையிட்டு, அதற்கான தீர்வும் காண்கிறார்கள். இச்சக்தி பீடத்தில் துர்க்கை அம்மனுக்கென்று தனி சன்னதி கிடையாது. ஸ்ரீ ராஜகாளியே துர்க்கை அம்மனாகவும் பிரதிபலிக்கிறாள்.

அண்டங்களுக்கு எல்லாம் அண்டமாக பிரபஞ்சங்களுக்கு எல்லாம் ஒரே சக்தியாக விளங்கும் ஸ்ரீ ராஜகாளியம்மனுக்கு விளக்கேற்றி, வாழ்வில் ஒளி பெறுங்கள். வளமான வாழ்வு பெருகட்டும்.

### சேஷாத்ரி ஸ்வாமி ஜெயந்தி விழா

**5-2-2018 அன்று ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி விழா மாடம்பாக்கம், சக்தி பீடத்தில் நடைபெறுகிறது. விசேஷ ஹோமங்கள், அன்னதானம் நடைபெறுவதால் அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசுபராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள். பதினெண் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம். விபரங்களுக்கு : 044- 24938734, 24953793 கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.

# மார்கழி மகிமை

மாதங்களில் மிகவும் உயர்ந்தது மார்கழி என்பார்கள். அதனால்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்றார் அவரே கீதையில், ''மார்கழி மாதத்தை தேவர்களின் மாதம் என்றும் கூறுகிறார். இம்மாதத்தில் விடியற்காலையிலிருந்தே வழிபாடுகள் துவங்கிவிடும் அதோடு திருப்பள்ளி எழுச்சி பூஜையும் தொடங்கிவிடும். அக்காலத்தில் திருமணத்திற்கு தயாராக இருக்கும் பெண் அல்லது பிள்ளை இருக்கும் வீட்டு வாயிலின் கோலத்தின் மேல் வைக்கும் சாணத்தில் பூசணிப்பூ வைப்பார்கள். அப்பொழுது வீதியில் பஜனைக்கு வருபவர்களின் பார்வையில் இப்பூ தென்படும் விவரத்தை அறிந்து உடன் பேசி, தை பிறந்த பின்பு திருமணம் முடிப்பார்கள். இச்சுப நிகழ்வுகளைப் போல, மார்கழியில் பல புராதன நிகழ்வுகளும் நடந்துள்ளன. மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. இந்திரனால் பெருமழை வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்ட பொழுது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியது இம்மார்கழி மாதத்தில்தான் என சான்றோர்கள் உரைக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை பாசுரம் பாடி, திருமாலின் திருவடி தொழுதது, மகத்துவம் நிறைந்த இம்மார்கழி மாதத்தில்தான் சிதம்பரம் திருக்கோவிலின் ஆருத்ரா தரிசனமும், ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி திருவிழாவும் இம்மாதத்தில் நடைபெறும் முக்கியமான விசேஷங்களாகும். அதுமட்டுமல்ல, ஆன்மிக மலர்ச்சிக்கு அருட்பேறாக விளங்கும் இம்மார்கழி மாதத்தில், நம் பதினென் சித்தர் சக்தி பீட பிருந்தாவனத்திற்கு வந்து, இறையருளில் கலந்து, வாழ்வின் சிறப்பான பேறுகளை பெறவேண்டும் என்று பக்தர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– உமாபரணி

## இனி செய்வோமா...! இனிதே செய்வோமா!

1. விவசாயம் செய்வோம்!
2. மண்கலயம் பயன்படுத்துவோம்...!
3. குருவை மதிப்போம்...!
4. சமையல் கலை பயிலுவோம்
5. குலதெய்வம் வணங்குவோம்
6. விண்ணாய்வு செய்வோம்
7. அகழ்வாராய்ச்சி செய்வோம்
8. காடு செழிக்க வாழ்த்துவோம்
9. மலை வளம் காப்போம்
10. நதிகளை இணைப்போம்
11. நீர்வளம் பெருக்குவோம்
12. கைவினைக் கலைகளைக் கற்போம்


## ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**இலவச மருத்துவமனை செயல்படுகிறது.**

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் நடைபெறுகிறது. வடை பாயசத்துடன் அன்னதானம் ரூ. 2500/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்



## காஞ்சி மஹான் அருளியது - மருத்துவர்களின் மருத்துவர்

பெங்களூர் நகரில் மிகவும் பிரபலமான டாக்டர் ராசியான டாக்டர் எனவும் புகழப்பட்டார். நோயாளிகளிடம் அதிக பணம் கேட்பது கிடைக்காது. வந்தவர்கள் எல்லோரும் நோய்குணமாகி திரும்புவார்கள் எனும் சிறப்பு இருந்தும் அவருக்கு தேர்வு வைத்ததைப் போல் அவரிடம் ஒரு நோயாளி தன் நோயைத் தீர்க்க அணுகினார்.

வயிற்றுவலிதானே என்று முறைப்படி டாக்டரும் அந்த நோயாளிக்கு மருந்து கொடுத்தார். ஓரிரு நாளில் குணமாகிவிடும் என்று டாக்டரும், இவரிடம் வந்தால் தனது உபாதை தீர்த்துவிடும் என்று அந்த நோயாளியும் நினைத்தனர். இருவது நம்பிக்கையையும் நோய் தகர்த்தெறிந்துவிட்டது. வயிற்றுவலி குணமாகவே இல்லை. டாக்டர் தொடர்ச்சியாக தனக்குத் தெரிந்த எல்லா மருந்துகளையும் அவருக்குக் கொடுத்துப் பார்த்தார். நோயாளியும் பிடிவாதமாக இந்த டாக்டரைத் தவிர வேறு டாக்டரிடம் போகக் கூடாது என்று சபதம் எடுத்துக் கொண்டது போல் இவரிடமே வந்தார். இவர் கொடுத்த மருந்தை மட்டும் விடாமல் சாப்பிட்டார். பலன்தான் இல்லை.

மனம் வெறுத்துப் போன டாக்டர், தமது தெய்வம் என்று உபாசித்த காஞ்சிமகானை வேண்டினார். இந்த டாக்டர், மகானின் நெருங்கிய பக்தர்களில் மிகவும் முக்கியமானவர். சமயம் கிடைக்கும் போதெல்லாம் டாக்டர், மகானை நேரில் வந்து தரிசிக்கத் தவறுவதே இல்லை.

''சர்வேஸ்வரா என்ன சோதனை இது? என்னிடம் வந்தவர்களில், உங்கள் அருளால் குணமாகிப் போனவர்கள் தான் அதிகம். இந்த ஒரு நோயாளி மட்டும், என் வைத்தியத்திற்கே சோதனை வைத்துக் கொண்டு இருக்கிறாரே? இதிலிருந்து மீள்வதற்கு எனக்கு தாங்கள் தான் வழிகாட்டவேண்டும்'' என்று மனமுருகி மகானை வேண்டினார். டாக்டரும் மகானிடம் நேரில் வரவில்லை. அதனால் என்ன? தனது பக்தனுக்கு அருள்பாலிக்க அன்று இரவே மகான் டாக்டரின் கனவில் வந்தார்.

'நீ அந்த நோயாளியின் சாப்பாட்டு நேரத்தைப் பற்றிக் கேள். பிறகு அதை மாற்றி அமைத்தால் எல்லாமே சரியாகிவிடும்' என்று சொல்லிவிட்டு மறைந்தார். டாக்டர், தமக்கு மகான் உத்தரவிட்ட விஷயமாக யோசித்தார். 'சாப்பாட்டை மாற்றி அமை' என்றால் எப்படி?

அந்தத் தொழிலாளி ஒரு மில்லில் வேலை செய்பவர், மறுநாள் அவர் வந்தபோது அவரிடம் சாப்பாட்டு நேரத்தைக் கேட்டார். ''மில்லில் வேலை எல்லாம் முடிந்த பிறகு மாலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள் எனது ஆகாரத்தை முடித்துக் கொள்வேன்'' என்று தொழிலாளி சொன்னார். சரியான பிரதோஷ காலமல்லவா அது?

டாக்டர் அவரிடம் ''நீ சாப்பிடும் நேரம் சரியாக இல்லை. காலை, மதியம், இரவு என்று மூன்று வேலை ஒழுங்காகச் சாப்பிட்டபின் என்னிடம் வா'' என்றார்.

''டாக்டர் சொல்லிவிட்டாரே'' என்று தொழிலாளியும் தனது ஆகார நேரத்தை மாற்றி அமைத்தார். மகானின் உத்தரவல்லவா அது? தொடர்ந்து ஒரு வாரம் ஆகாரத்தைக் குறித்த நேரத்தில் சாப்பிட்ட தொழிலாளி, டாக்டர்டம் வந்தார்.

''இப்போதெல்லாம் எனக்கு வயிற்றுவலி வருவதே இல்லை டாக்டர். நான் மருந்தை கூட சாப்பிடுவதில்லை'' என்றார். தெய்வ வைத்தியர் கொடுத்த யோசனை அல்லவா இது! டாக்டர், மகானின் திக்கு நோக்கி வழிபட்டார்.

டாக்டருக்கு மேல் டாக்டராக விளங்கும் அந்த மகானின் பாதார விந்தங்களை நாம் பற்றிக் கொண்டால், நமக்கு நோய் எங்கேயிருந்து வரும்? வைத்தியர் நேரில் சொன்ன அனுபவம் இது.


## ஸ்ரீ சேஷ ஒளி
### விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |


Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.